தெய்விக மருத்துவர் டாக்டர் அக்பர் கவுஸர் எழுதிய

# "நோய்களைக் குணப்படுத்தும் இந்துக் கோவில் மரங்கள்"

நூலுக்கு தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்

## திரு. இல. கணேசன்

அவர்கள் வழங்கிய அணிந்துரை...






### இந்துக்கோவில் மரங்கள்...

ஒரு மனிதனின் சிறப்பான வாழ்க்கைக்கு உடல்நலனும் தேவை, மனநலனும் தேவை. மனநலனை ஸ்தலங்களும் உடல்நலத்தை ஸ்தல விருட்சங்களும் அருளின என்று சொல்வது மிகையாகாது. இயற்கையோடு ஒன்றியது மனிதனின் வாழ்வு என்பதும், இயற்கையும் இறைவனும் துதிக்கப்பட வேண்டியது என்பதும் இந்த ஸ்தல விருட்சங்கள் நமக்கு உணர்த்துபவை. இதற்குச் சான்றாகத்தான் ஆயுர்வேதம் என்று நாம் சொல்வது. இது உலகிலேயே மிகப்பழமையான சிகிச்சை முறை (கி.பி.300)—அதன் அடிப்படையே இலைகள், வேர்கள் மற்றும் தாவரங்கள் தான். ஆயுர்வேதம், ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிறது. மருத்துவக் குணங்கள் உள்ள செடிகளும் மரங்களும் ரிக் வேதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

**டாக்டர் அக்பர் கவுஸர் எழுதிய இந்த நூல் ஒவ்வொரு வீட்டிலும் ஆரோக்கியத்தைப் பேணும் ஓர் ஆவணமாகவே பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு நல்ல நூல் என்பதையும் பெருமையுடன் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

இந்தியாவில் 20,000—த்திற்கும் மேற்பட்ட தாவரங்கள் – மருத்துவ குணம் உள்ளதாகக் கருதப்படுகிறது. இன்னும் செரல்லப் போனால் மருத்துவ குணம் உள்ள மரங்கள், செடி கொடிகள் பற்றிய கருத்தரங்கம் உலகத்திலேயே (கி.பி. 700) முதன் முதலாக இந்தியாவில்தான் நடந்தது. அந்தக் கருத்தரங்கை பரத்வாஜ முனிவர் நடத்தினார் என்கிறது வரலாறு. தமிழகத்திலும் பண்டைய இலக்கியங்களில் மரங்கள் அதிகம் பேசப்பட்டிருப்பதும் நாம் அறிந்ததே.